தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கொய்யாவில் புதியதாக தோன்றியுள்ள நூற்புழு பிரச்சனை

தமிழ்நாட்டில் கொய்யா பழப்பயிர் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த ஆயக்குடியில் அதிகமான அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பகுதியில் கொய்யா இளம் மரங்களின் இலைகள் வெளிர்தல், உதிர்தல் மற்றும் மரங்கள் பட்டுப்போகுதல் குறித்தான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் இம்மரங்களை தாக்கும் வேர்முடிச்சு நூற்புழுக்களே இத்தகைய சேதாரத்திற்கு காரணம் என்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் இவ்வேர்முடிச்சு நூற்புழு *மிலாய்டோகைனி எண்டிரோடோபி* என்று அடையாளம் காணப்பட்டது. இந்தியாவில் இச்சிற்றின வேர்முடிச்சு நூற்புழுக்கள் கொய்யாவிலோ (அ) இதர பயிர்களிலோ காணப்படுவதாக பதிவு செய்யப்படாததால் இந்நூற்புழுக்கள் வெளிநாட்டிலிருந்து கொய்யா பழ நாற்றுகள் மூலம் ஊடுருவிக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகிறது.

இக்கொடிய கண்ணிற்கு புலப்படாத நூற்புழுக்கள் தாக்குதல் ஆரம்பித்த மூன்று மாதத்திற்குள் மரங்களை முழுமையாக பட்டுப்போக செய்யவல்லதால் கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த நூற்புழு பாதுகாப்பு முறைகளை கையாளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- நூற்புழுக்களால் பாதிக்கப்படாத நாற்றுகளை உபயோகித்தல்.
- நூற்புழுக்களால் பாதிக்கப்பட்ட மரங்களை வேருடன் உடனுக்குடன் அப்புறப்படுத்துதல்.
- இந்நூற்புழுக்கள் பாதிப்பினால் ஏற்படுத்தப்படும் ஆரம்ப அறிகுறிகளான இலைகள் மஞ்சளாகுதல் மற்றும் வளர்ச்சி குன்றுதல் தென்பட்டவுடன் தோட்டத்திலுள்ள அனைத்து கொய்யா மரங்களின் வேர்களைச் சுற்றி மரமொன்றுக்கு தொழுஉரம் - 100கிகி, வேப்பம்பிண்ணாக்கு – 250கி, உயிரியல் பூஞ்சாண கொல்லியான *பெசிலோமைசஸ் லில்லாசினஸ்* - 25கி மற்றும் கார்போயியூரான் - 60கி இடவும். மேலும் இந்நூற்புழுக்கள்

குறித்தான விரிவான ஆராய்ச்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நூற்புழுவியல் துறையினரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

**முனைவர். கி. பூர்ணிமா, முனைவர். சௌ. ராமகிருஷ்ணன் மற்றும்**
**முனைவர். ச. சுப்ரமணியன்**

நூற்புழுவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் – 0422-6611264

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்











